## தமிழ்நாடு வளர்ச்சிக்கான நிதி வழங்கவில்லை:

# மோடி - அமித்ஷா தமிழ்நாட்டுக்கு சுற்றுலாப் பயணிகள் போல வந்து செல்கின்றனர்!

## நிலக்கோட்டை தேர்தல் பரப்புரையில் – கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!



**திண்டுக்கல், ஏப். 5–**
**திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை தொகுதியில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் நாகஜோதியை ஆதரித்து தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, நிலக்கோட்டை பேருந்து நிலையம் அருகே மக்களை சந்தித்து திராவிட மாடல் அரசின் சாதனைகளையும், ஆட்சி அமைய உள்ள திராவிட மாடல் 2.0 அரசின் திட்டத்தையும் எடுத்துரைத்து தேர்தல் பரப்புரை மேற்கொண்டார்.**

இதில், தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் ஐ.பெரியசாமி, திண்டுக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் அர.சக்கரபாணி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

தேர்தல் பிரச்சாரத்தில் பேசிய கனிமொழி கருணந்தி எம்.பி.; நம்முடைய வேட்பாளர் நாகஜோதி தொடர்ந்து மக்களோடு பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய ஒருவர். அவரை எதிர்த்து நிற்கக்கூடிய வேட்பாளர் மக்களை சந்தித்ததே கிடையாது. சட்டமன்றத்துக்கு போவார்கள், அதைத் தாண்டி மக்களை சந்திப்பதில்லை. மக்களுடைய குறைகளை தீர்த்து வைக்கக்கூடிய வேட்பாளர் நாகஜோதி.

இஸ்லாமியர்களுக்கு எதிரான சிஏஏ சட்டம் நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டபோது அதை எடப்பாடி பழனிசாமி ஆதரித்தார். அதற்குப் பிறகு நாடாளுமன்ற தேர்தல் வந்தபோது அந்த கூட்டணியிலிருந்து விலகினார். அப்போது நான் பண்ணியது மிகப் பெரிய தப்பு. இனிமேல் பாஜகவோடுட எனக்கு ஒட்டுமில்லை, உறவும் இல்லை என்று மிகப் பெரிய பிரகடனமாகச் சொன்னார். சொல்லி, இப்போது மறுபடியும் பாஜகவோடு, மோடியோடு கூட்டணி வைத்திருக்கிறார்.

நீங்கள் கூட்டணியில் இருந்த காலத்துல் சிஏஏக்கு எதிராக போராடின அத்தனை பேர்மேலும் கேஸ் போட்டீர்கள். வழக்கு போட்டு தடியடி நடத்தியவர் எடப்பாடி பழனிசாமி தான். ஆனால், அப்போது "யாரோட நாங்க கூட்டணி வைத்தது தப்பு" என்று சொன்னவர், இன்னைக்கு அதே மேடையில் நின்று கைகோர்த்துக் கொண்டு, அந்த பாஜக கூட்டணியில் தன்னை ஐக்கியமாக்கிக் கொண்டிருக்கக்கூடிய, மாற்றி மாற்றிப் பேசிக் கொண்டிருக்கக்கூடிய எடப்பாடி பழனிசாமிக்கு சரியான பாடத்தை புகட்ட வேண்டும்.

எதை எதிர்த்து மக்களுக்கு எதிரா எதை கொண்டு வந்தாரோ, தமிழ் நாட்டு மக்களுடைய பெருமையை சொல்லக்கூடிய கீழடி, அந்த கீழடி ஆய்வறிக்கையை கொடுத்தால் பிஜேபி சொல்லுதோ இல்லையோ பிஜேபி கேக்குறமாதிரி அந்த ரிப்போர்ட்டை மாத்திக்கொடுங்க, அறிக்கையை மாத்திக்கொடுங்க அப்படின்னு சொல்லக்கூடிய, சொல்லிக்கொண்டிருக்கக்கூடியவரு தான் பழனிசாமி.

தமிழ்நாட்டு மக்களுடைய பெருமையை சொல்லக்கூடிய கீழடி. அந்த கீழடி ஆய்வறிக்கையை கொடுத்தால், பாஜக கேக்கிற மாதிரி அந்த அறிக்கையை மாற்றிக் கொடுக்க சொல்லக்கூடியவர் தான் பழனிசாமி.

நாடாளுமன்றத்தில் 100 நாள் வேலைத் திட்டம், மகாத்மா காந்தி ஊரக் வேலை உறுதித் திட்டம் ஆகியவற்றை, கிராமப்புறங்களில் உள்ள மக்களுக்கு நூறு நாளுக்கு வேலை கிடைக்கச் செய்யும் நோக்கில் கொண்டுவரப்பட்டது. அதை இன்னைக்கு பிஜேபி ஒழிக்கக்கூடிய வகையில் மாற்றி, மகாத்மா காந்தி பேரையும் எடுத்திட்டு, விபி ஜி ராம் ஜி என்று மாற்றி விட்டனர்.

எந்த மகாத்மா காந்தி தன்னுடைய இறுதி மூச்சிருக்கும் வரை எந்த ராம் என்ற பேரை உச்சரித்துக்கொண்டிருந்தாரோ? அவருடைய பேரை எடுத்துட்டு எந்த ராம கொண்டு வந்தாங்கன்னு தெரியவில்லை? மகாத்மா காந்தி அவர்கள் வழிபட்ட அந்த ராம் பெயர, இல்லைன்னா மகாத்மா காந்தியை கொன்ற ராம் என்ற பேரான்னு தெரியவில்லை. திட்டத்தின் பெயரை மாற்றினாலும், இப்ப நூறு நாள் வேலை யாருக்கும் நூறு நாள் வேலை கிடையாது. இங்க இருக்கக் கூடிய சகோதரிகள், சகோதரர்கள் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இதற்கெல்லாம் பதில் சொல்லாமல், தேர்தல் பிரச்சாரத்திற்காக மோடி அவர்களும், அமித்ஷா அவர்களும் தமிழ்நாடு இருக்கு சுற்றுலாப் பயணிகள் போல வந்து செல்கின்றனர், தமிழ்நாடு வளர்ச்சிக்கு என்று எந்த ஒரு நிதியும் வழங்கவில்லை. இதுகுறித்து எடப்பாடி பழனிச்சாமி இது வரை வாய் திறக்கவில்லை.

சிலிண்டர் தட்டுப்பாட்டிற்கு எந்த முன்னேற்பாடும் ஒன்றிய அரசு செய்யவில்லை; பல நிறுவனங்கள், உணவகங்கள், சாலையோர உணவகங்கள் மூடப்பட்டு, அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கும் துரோகம் இழைத்தவர்கள் இவர்கள், இவர்களின் கூட்டணி துரோக கூட்டணியை உருவாக்கியுள்ளனர். தன்னுடைய கட்சியில் வளர்ந்த அனைவரையும் கட்சியை விட்டு அனுப்பிவிட்டு தான் மட்டும் இருக்க வேண்டும் என நினைப்பவர் தான் எடப்பாடி பழனிசாமி.

திமுக அரசின் சாதனைகளை பட்டியலிட்டால் நீண்டு கொண்டே இருக்கும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை மூலம் ஒரு கோடியே 31 லட்சம் மகளிர் பயன்பெற்று வருகின்றனர்,

மகளிர் விடியல் பயணம் மூலம் சராசரியாக ஒரு பெண்மணி 800 முதல் 1000 ரூபாய் வரை சேமிக்கிறார், புதுமைப்பெண், தமிழ் புதல்வன் திட்டம், மக்களை தேடி மருத்துவம், இன்னும் இன்னுயிர் காப்போம் நம்மை காக்கும் 48, முதல்வர் மருந்தகம், காலை உணவு திட்டம் இவ்வாறு சொல்லிக் கொண்டே போகலாம்.

நிலக்கோட்டை தொகுதிக்கான திமுக தேர்தல் வாக்குறுதிகள்

- **வத்தலக்குண்டு டவுன் பகுதியில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்கப் புதிய புறவழிச்சாலை அமைக்கப்படும்.**
- **மேட்டுப்பட்டி பகுதியில் புதிய புறக்காவல் நிலையம் அமைக்கப்படும்.**
- **சின்னாளப்பட்டியில் அரசு நிதி உதவியுடன் நவீனப் பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும்.**
- **நகரின் முக்கிய இடங்களில் பொழுதுபோக்கு பூங்காக்கள் மற்றும் நவீன உடற்பயிற்சிக் கூடங்கள் அமைக்கப்படும்.**
- **சீரான மின் விநியோகம் வழங்கப் புதிய மின்சார வாரிய துணை மின் நிலையம் அமைக்கப்படும்.**
- **இளைஞர்களுக்காக முதல்வர் படைப்பகம் தொடங்கப்படும்.**
- **அரசுப் பள்ளிகள் அனைத்திற்கும் ஸ்மார்ட் போர்டு வசதி செய்து தரப்படும்.**

திமுகவில் அறிவிக்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் நிறைவேற்றப்படும், ஆனால் அவர்களின் வாக்குறுதி என்பது ஒருபோதும் நிறைவேற்றப்படாதது.

நமது தேர்தல் அறிக்கையில், கலைஞர் உரிமைத்தொகை 2000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும், புதுமைப்பெண், தமிழ் புதல்வன் திட்டம் ஊக்கத்தொகை உயர்த்தி வழங்கப்பட உள்ளது,

மகளிருக்கு வீட்டு உபயோக பொருட்கள் வாங்க 8000 ரூபாய் மதிப்பிலான கூப்பன் வழங்கப்படுகிறது, அதை வைத்து அவர்கள் வீட்டு உபயோகத்துக்கு தேவையான எந்த பொருள் வேண்டுமானாலும் வாங்கிக் கொள்ளலாம்.

கலைஞர் கொடுத்த தொலைக்காட்சி இன்றும் மக்கள் பயன்பாட்டில் உள்ளது, அவர்கள் கொடுத்த மிக்ஸி, கிரைண்டர் எங்கு இருக்கிறது என்று தெரியவில்லை என்று பேசினார்.

# தமிழர்களை வஞ்சிக்கும் டெல்லிக்கு எதிரான ஜனநாயகப் போரில் தமிழ்நாடு வெற்றி பெறும்!

## திருவண்ணாமலை வாக்கு சேகரிப்பில் – அமைச்சர் எ.வ.வேலு பேச்சு!

**திருவண்ணாமலை, ஏப். 5–**
**தமிழர்களை வஞ்சிக்கும் டெல்லிக்கு எதிராக, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நடத்தும் ஜனநாயகப் போரில் தமிழ்நாடு நிச்சியம் வெற்றி பெறும் என்று, திருவண்ணாமலையில் வீதி, வீதியாக வாக்கு சேகரிப்பின்போது, பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக வேட்பாளருமான எ.வ.வேலு உரை யாற்றும் போது குறிப்பிட்டார்.**

03.04.2026 வெள்ளிக்கிழமை காலை 7.00மணிக்கு திருவண்ணாமலை அண்ணாமலையார் திருக்கோவில் எதிரில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின், திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு அவர்கள் பொது மக்களிடம் வாக்குசேகரித்தலை தொடங்கினார்.

அண்ணாமலையார் திருக்கோவில் எதிரிலிருந்து தொடங்கிய வாக்குசேகரிக்கும் நிகழ்ச்சி தேரடி வீதி, கடலைக் கடை சந்திப்பு, கடம்பராயன் தெரு, அய்யங்குளத் தெரு, திருக்கோவிலூர் சாலை வழியாக திருவள்ளுவர் சிலை வரை, வீதி, வீதியாக பொது மக்கள் மற்றும் வியாபாரிகளிடம் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் வாக்குச் சேகரித்தார்.

வாக்குசேகரிப்பின்போது பேசியதாவது:–

இது வெறும் வாக்குச் சேகரிப்பு நிகழ்ச்சி அல்ல, இது ஒரு ஜனநாயகப் போர். தமிழ்நாட்டை, தமிழர்களை வஞ்சிக்கும் டெல்லி ஏகாதிபத்தியமான மோடி அரசை எதிர்த்து, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையில் நடக்கும் ஜனநாயகப் போர்.

டெல்லி ஏகாதிபத்தியமான பாரதிய ஜனதா அரசு, தமிழ்நாட்டிற்கு



தரவேண்டிய திட்டங்களுக்கான நிதியோ, வெள்ளநிவாரணநிதியோ அல்லது கல்வி நிதியோ தர மறுக்கிறார்கள்.

இந்தியாவிலேயே ஜி.எஸ்.டி. யாக அதிகம் வசூலிக்கப்படுவது தமிழ்நாட்டில்தான். ஆனால், நமக்கு 1ரூபாய்க்கு 29பைசாக்கள் தருகிறார்கள். மீதித் தொகை நம்முடைய பணம் எங்கே செல்கிறது தெரியுமா? வட மாநிலங்களான உத்திரப் பிரதேசம், பீகார், இராஜஸ்தான், மகாராஸ்டிரம் போன்ற பகுதிகளுக்கு நம்முடைய வரிப்பணம் செலவிடப்படுகிறது.

நமது பேரறிஞர் அண்ணா பொறுப்பேற்றவுடன் இரு மொழிக் கொள்கைதான் தமிழ்நாட்டிற்கு என்று சட்டம் இயற்றினார். அதை தலைவர் கலைஞரும், முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும் தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். அண்ணா தெளிவாகச் சொன்னார் நமக்கு தாய் மொழி தமிழ். தொடர்பு மொழி ஆங்கிலம் என்று. இந்தி படித்தால்தான் தமிழ்நாட்டிற்கான கல்வி நிதியை தரமுடியும் என்று டெல்லி ஏகாதிபத்தியம் கொக்கரிக்கிறது.

பீகாரிலும், உத்திரப்பிரதேசத்திலும் இந்தி படித்தவர்கள் என்ன செய்கிறார்கள். நமது தமிழ்நாட்டில் கொத்தனார் வேலைகளிலும், மருத்துவமனைகளிலும், தொழிற்சாலைகளிலும் கூலி வேலை செய்து வருகிறார்கள். தமிழர்கள் தமிழோடு, தொடர்பு மொழியான ஆங்கிலத்தை கற்றதால்தான், கடந்த 50 ஆண்டுகளாக வெளிநாடுகளில் கணினி தொழில்நுட்பத்திலும், வேலை வாய்ப்பிலும் உயர்ந்திருக்கிறார்கள்.

இந்தி படித்தால்தான் கல்வி மானியம் தரப்படும் என டெல்லி ஏகாதிபத்தியமான மோடி அரசாங்கத்தைப் பார்த்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நீங்கள் கோடி கொட்டிக் கொடுத்தாலும், எங்களுக்கு இந்தி வேண்டாம், நாங்கள் இருமொழிக் கொள்கையில் உறுதியாக இருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்.

நமது கூட்டணி என்பது மதச்சார்பற்றது, சர்வாதிகாரத்திற்கு எதிரானது, ஜனநாயகத்தை பாதுகாக்கும் கொள்கை வழிக் கூட்டணி. தமிழ்நாட்டை, தமிழர்களை தொடர்ந்து வஞ்சிக்கும் டெல்லி ஏகாதிபத்தியத்தை வீழ்த்துவோம், தமிழ்நாடு வெல்லட்டும். இவ்வாறு உரையாற்றினார்.

வாக்குச்சேகரிப்பு நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.என். அண்ணாதுரை, தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்டப் பொருளாளர் எஸ்.பன்னீர் செல்வம், மாநகர செயலாளர் ப. கார்த்திவேல்மாறன், மாவட்ட துணை செயலாளர் பிரியா விஜயரங்கன், மாநகர மேயர் நிர்மலா வேல்மாறன், காங்கிரஸ் மாவட்டத் தலைவர் கே.குணசேகரன், தி.க. தலைவர் சி.மூர்த்தி, ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் சீனி.கார்த்திகேயன், தே.மு.தி.க. மாவட்டச் செயலாளர் வி.எம்.நேரு, சி.பி.எம். எம். சிவக்குமார், சி.பி.ஐ., மாவட்ட செயலாளர் இரா.திருமலை, முஸ்லீம் லீக் மாவட்ட தலைவர் ஐ.எம்.சுலைமான் கான், விடுதலைச் சிறுத்தைகள் மாவட்ட செயலாளர் ச.நியூட்டன், மனிதநேய மக்கள் கட்சி மாவட்டத் தலைவர் நாசர் உசேன், மக்கள் நீதி மையம் மண்டல பொறுப்பாளர் இரா.அருள், மனிதநேய ஜனநாயக கட்சி ஜி.கேட் குமார், எஸ்.டி.பி.ஐ.மாவட்ட தலைவர் முஸ்தாக் பாஷா, தமிழக முன்னேற்றக் கழக நிறுவனத் தலைவர் கு.ராஜாராம், தமிழக விவசாய தொழிலாளர் பி.வாசு, ஆதித் தமிழர் பேரவை எஸ்.கந்தன், தலித் விடுதலை இயக்கம் என்.ஏ.கிச்சா மற்றும் துணை மேயர் சு.ராஜாங்கம், பகுதி பொறுப்பாளர்கள் சு.விஜி(ஏ) விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா.ஷெரீப் மற்றும் கூட்டணி இயக்கத்தினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி தி.மு.க. சார்பில் போட்டியிடும் டாக்டர் ராஜேஸ்வரி , தேர்தல் நடத்தும் அலுவலர் வட்டாட்சியர் ச.சரவணனிடம் வேட்புமனு தாக்கல் செய்தார். உடன் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர், திருநாவலூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் ஜி.ஆர்.வசந்தவேல் நேற்று (ஏப்ரல் 4ஆம் தேதி) தேர்தல் நடத்தும் அலுவலர் செந்தில்குமாரிடம் வேட்புமனு தாக்கல் செய்தார், அப்போது கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



திராவிட முன்னேற்றக் கழக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர், கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளரும், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மணலூர்பேட்டை, சித்தப்பட்டினம், முருக்கம்பாடி, அத்தியந்தல், தேவரடியார் குப்பம் ஆகிய பகுதிகளில் வீதி,வீதியாக பொதுமக்களை நேரில் சந்தித்து தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் நல்லாட்சியின் சாதனைகளை எடுத்துரைத்து, உதயசூரியன் சின்னத்தில் வாக்குகளைச் சேகரித்தார், இதில் கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணிக் கட்சிகளை சேர்ந்த நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



நெய்வேலி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் கழக வேட்பாளர் சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. வெங்கடாம் பேட்டை ஊராட்சியில் தேர்தல் பிரச்சார பயணத்தை துவக்கி ஆயிப்பேட்டை, கீழூர், பாச்சார பாளையம் உள்ளிட்ட 20க்கு மேற்பட்ட கிராமங்களில் தீவிர வாக்குச் சேகரித்தார் . பொதுமக்கள் மாபெரும் வரவேற்பு அளித்து வாக்களிக்க உறுதியளித்தனர். தே.மு.தி.க மாவட்ட செயலாளர், முன்னாள் எம்.எல்.ஏ, சிவக்கொழுந்து உள்ளிட்ட கூட்டணிக் கட்சி தலைவர்கள் கலந்து கொண்டனர்.